DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No.56/2024 & Spl.SC.No.57/2024

PROSECUTION WITNESS No - PW- 2

| | |
|---|---|
| Name : கணேசன் | Caste: |
| Father Name | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of February 2026.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் கடந்த 31.05.2024ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்சமயம் மானாமதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 24.08.2020ம் தேதி சிப்காட் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது காலை சுமார் 10.00 மணியளவில் சிப்காட் காவல் நிலையத்தில் பணிபுரிந்த 2ம் நிலை காவலர் தனசேகரன் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதனுடன் அவர் ஒப்படைத்த TN63L0067 என்ற எண் கொண்ட டிராக்டரும் அதனுடன் TN63L1883 என்ற பதிவெண்ட கொண்ட டிரெய்லரும் மணலுடன் சம்பந்தப்பட்ட எதிரியை அழைத்து நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண்.216/2020 ஆக இ.த.ச பிரிவு 379ன் கீழ் முதல் தகவல் அறிக்கை தயாரித்தேன். மேற்படி நான் தயாரித்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கையை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வழக்கின் விசாரணையை நானே துவங்கினேன். அன்றைய தினமே பகல் 11.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கவியரசு மற்றும் கலைசெல்வம் என்பவர்களின் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். மேற்படி நான் தயாரித்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. மேற்படி மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 24.08.2020ம் தேதி 14.00 மணிக்கு தலைமை காவலர் கணேசன், தனசேகரன் முன்னிலையில் நான் TN63L0067 என்ற எண் கொண்ட டிராக்டர் மற்றும் அதனுடன் இணைந்த TN63L1883 என்ற பதிவெண்ட கொண்ட டிரெய்லரை 1 யூனிட் சவடு மணலுடன் கைப்பற்றியதற்கு தயாரித்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் நான் கைப்பற்றிய TN63L0067 என்ற எண் கொண்ட டிராக்டரும் அதனுடன் TN63L1883 என்ற பதிவெண்ட கொண்ட டிரெய்லரும் உரிய சொத்து படிவம் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி TN63L0067 என்ற எண் கொண்ட டிராக்டரும் அதனுடன் TN63L1883 என்ற பதிவெண்ட கொண்ட டிரெய்லரும் **சா.பொ.1** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி படிவம் 91 **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனத்துடன் கூடிய மணலை உரிய வட்டாச்சியரிடம் ஒப்படைத்ததற்கு பெற்ற ஒப்புகை ரசீது **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி வண்டியுடன் ஒப்படைக்கப்பட்டதால் அந்த காலகட்டம் கொரோனா காலம் என்பதால் நிலைய ஜாமீனில் எதிரியை பிணையில் விடுத்தேன். மேலும் இவ்வழக்கில் சாட்சிகளான காவலர் தனசேகரன், தலைமை காவலர் கணேசன், சாட்சிகள் கவியரசு, கலைச்செல்வம் ஆகியோர்களை விசரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்து குற்றத்தின் தன்மைக்கேற்ப கடந்த 30.09.2020ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இவ்வழக்கின் சம்பவ இடம் குறித்து நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் புகார் கொடுத்த காவலர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சர்வே எண் மற்றும் நீள அகலங்கள் குறித்து

குறிப்பிட்டு புகார் வழங்கியுள்ளாரா என்றால் இல்லை. இவ்வழக்கில் வழக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் கிராம நிர்வாக அலுவலரையோ உதவியாளரையோ சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் நான் தயாரித்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தின் சர்வே எண் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் குறித்து தனியாக கனிம வளத்துறைக்கு கடிதம் எதுவும் தகவலுக்காக கொடுத்தேனா என்றால் இல்லை. டிராக்டர் மற்றும் டிரெய்லரை கைப்பற்றிய மகஜரில் எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் மகஜர் சாட்சிகள் சம்மந்தப்பட்ட ஊரில் இல்லை என்று கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளதால் நான் கற்பனையாக இரண்டு நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இவ்வழக்கின் எதிரியிடம் தனியாக ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சென்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனு பெறவில்லை என்றும் வழக்கு தொடர்பான மகஜர் அத்தாட்சி, வரைபடம் ஆகியவைகள் புள்ளி விவர கணக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரியை சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும் வழக்கு சம்பவம் குறித்து எதிரிக்கு எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.25 18:08:07 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை